# *ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 14.03.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

**தஸஹ்ஹுத் தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

அல்லாஹ்வின் ஒரு பண்பு *ஹலீம்* என்பதாகும். இறைவனுக்காக *ஹலீம்* என்ற பண்புப் பெயர் பயன்படுத்தப்படும்போது அதற்கு கருணை காட்டுபவன்; மன்னிப்பவன்; கண்டும் காணாமல் விட்டு விடுபவன் என்ற பொருள்கள் இருக்கின்றன. அதாவது இறைகட்டளைகளுக்கு கீழ்படியாமல் இருப்பதன் காரணமாக அவன் தனது அடியார்கள் மீது தனது கோபத்தை இறக்கி, அவர்களை விரைவாகப் பிடிக்கமாட்டான். மனிதன் அவனுக்கு கீழ்படியாமல் இருப்பதன் காரணமாக இறைவன் நிம்மதியிழந்தவனாக ஆகமாட்டான். மாறாக, அவன் மனிதனின் குற்றங்களை திரையிட்டு மறைக்கக்கூடியவனாக இருக்கின்றான். அல்லாஹ்வின் இந்த பண்பு வெளிப்படுகின்றபோது அவனது பல பண்புகள் அதற்குள் வந்து விடும். அவன் **ரஹீம்** ஆகவும் (மிகுதியாக கருணை காட்டுபவனாகவும்), **கஃபூர்** (மீண்டும் மீண்டும் மன்னிக்கக் கூடியவனாகவும்), **சத்தார்** (குற்றங்களை மறைப்பவனாகவும்) இருக்கின்றான். ஆனால், மனிதன் பிடிவாதத்துடன் அல்லாஹ் விதித்துள்ள வரம்புகளை மீறி செயல்படும்போது அல்லாஹ் விரும்பினால் அவனது பிடியையும் தண்டனையையும் வெளிப்படுத்துகின்ற பண்புகள் தனது பணியைச் செய்ய ஆரம்பிக்கும். திருக்குர்ஆனில் பல இடங்களில் அல்லாஹ் இவ்விஷயத்தை கூறியிருக்கின்றான். இறைவன் குற்றமிழைப்பவர்களைப் பிடிப்பதில் விரைவாக செயல்பட்டால் பாவங்களைச் செய்யும் மனிதனது ஒவ்வொரு குற்றத்திற்காகவும் அவன் பிடிக்கப்பட்டு இறைவனின் தண்டனைக்கு அவன் ஆளாகி விடுவான். மாறாக, பெரும் பாவங்களைச் செய்கின்றவர்களுக்கும் நான் மிக நீண்ட கால அவகாசத்தை வழங்குகின்றேன் என்றே அல்லாஹ் கூறுகின்றான். எதுவரையென்றால், நபிமார்களுக்கு துன்பங்களையும், தொல்லைகளையும் கொடுப்பவர்களுக்குக் கூட நான் அவர்களை உடனடியாகப் பிடிக்காமல் சிறிது கால அவகாசம் வழங்குகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

"மனிதர்கள் இழைக்கின்ற அநீதிகள் காரணமாக அல்லாஹ் அவர்களைப் பிடிப்பதாக இருந்தால் அவன் இந்த பூமியில் எந்த உயிரினத்தையும் எஞ்சியிருக்கும்படி விட்டு வைத்திருக்கமாட்டான். ஆனால் அல்லாஹ் அவர்களுக்கு விதித்திருக்கும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவர்களுக்கு கால அவகாசம் வழங்குகின்றான். அவர்களுக்கு விதிக்கப்பட்ட அந்த நேரம் வருகின்றபோது அவர்கள் அதிலிருந்து ஒரு நொடி பின்னால் செல்லவும் முடியாது. முன்னால் செல்லவும் முடியாது."

இறைவனை மறுப்பவர்களுக்கு இறைவன் கூறும் பதில் இதுதான். எவர்கள் நபிமார்களைப் பரிகாசம் செய்கின்றார்களோ அவர்களை உலக அலங்காரங்கள் முற்றிலும் குருடர்களாக ஆக்கியிருக்கின்றது. அல்லாஹ் தவறாக செயல்படுகின்றவர் களை கண்டிப்பாகப் பிடிக்கின்றான். அவ்வாறே தனது நேசத்திற்குரியவர்களைப் பரிகாசம் செய்பவர்களை அவன் கண்டிப்பாகப் பிடிக்கின்றான். எனவே, இதுவரை அல்லாஹ் உங்களை தண்டிக்காமல் இருக்கின்றான் என்றால் அதன் காரணமாக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நபி தவறிழைத்துள்ளார் (நவூதுபில்லாஹ்) என்று ஒருபோதும் நீங்கள் கருத வேண்டாம். அல்லது இறைவனே இல்லை என்றும் கருத வேண்டாம்.

இன்றைய நாட்களில் கேலிச் சித்திரங்களை வரைந்தவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவாக பேசிப் பரிகாசம் செய்தவர்கள், திருக்குர்ஆனைப் பற்றி இழிவாகப் பேசி எள்ளி நகையாடியவர்கள் ஆகியோருக்கும் அல்லாஹ் இந்த வசனத்தில் பதில் கூறியுள்ளான். அவர்களை ஏன் அல்லாஹ் சுதந்திரமாக விட்டு வைத்துள்ளான்? ஒருபோதும் அல்லாஹ் அவர்களை சுதந்திரமாக விட்டுவிடவில்லை. அவர்களுக்கு கால அவகாசம் வழங்கப்படுவதன் காரணம் என்னவென்றால், அல்லாஹ் தனக்கென்று ஒரு சட்டத்தை உருவாக்கியுள்ளான். அவனது ஹலீம்

(இரக்கமுடையவன்) என்ற பண்புதான் இவர்களை காப்பாற்றியிருக்கின்றது. அல்லாஹ்வின் இந்த பண்பு எதிர்பார்ப்பது என்னவென்றால், அல்லாஹ் அவனது அடியார்களைப் போல உடனடியாக கோபப்படுவதில்லை. எதுவரை எதிரிகளுக்கு தெளிவுகள் நிறைவு செய்யப்படுவதில்லையோ அதுவரை அவன் கோபப்படமாட்டான். எனவே இவ்வாறு உங்களுக்கு கால அவகாசம் வழங்கப்படுவது அல்லது உங்களுக்கு உடனடியாக தண்டனை வழங்கப்படாமலிருப்பது நீங்கள் உண்மையில் இருக்கின்றீர்கள் என்பதற்கான ஆதாரமாக ஒருபோதும் நீங்கள் கருத வேண்டாம். அல்லது இஸ்லாத்தையும் குர்ஆனையும் எவ்வளவுதான் இழிவாகப் பேசினாலும் உண்மையிலேயே இஸ்லாமும் குர்ஆனும் அவ்வாறு பேசப்பட வேண்டிய ஒன்றுதான். அதனால் ஒன்றுமில்லை என்றும் நீங்கள் கருத வேண்டாம். உங்களுக்கு தண்டனை கிடைக்காமல் இருப்பது இறைவனே இல்லை என்பதற்குரிய ஆதாரமாக இருக்கின்றது என்றும் நீங்கள் கருத வேண்டாம். இறைவன் எங்களை விரைவாக தண்டிக்கவில்லை. அதனால் உங்களது மார்க்கம் உண்மையானதல்ல என்று நீங்கள் கூறுவதாயிருந்தால் அல்லது இதை ஆதாரமாக வைத்து இறைவனே இல்லை என்று நீங்கள் கூறுவதாயிருந்தால் பிறகு உலக தீமைகளில் மூழ்கி குற்றமிழைக்கின்ற பல குற்றவாளிகளும் பிடிக்கப்படாமல் இருப்பதை நாம் பார்க்கின்றோம். சில குற்றங்கள் பற்றி தெரியவரும்போது அப்படிப்பட்ட நபர்கள் மீது அரசாங்கத்தின் துறைகள் ஒரு கண் வைத்திருக்கும். ஆனால், அவர்களை உடனடியாகப் பிடிக்காது. இந்த குற்றங்களுக்காக அவர்கள் இவ்வாறு பிடிக்கப்படாமல் விடப்படுவதால் அந்த குற்றங்கள் குற்றங்களாக எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று யாரும் கூற முடியாது. அரசாங்கங்களும் அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லை வரை கால அவகாசம் வழங்குகிறது. அவர்களை கண்காணிக்கின்றது. அதன் பிறகு சட்டம் செயல்படத் துவங்கும்.

அவ்வாறு இருக்கும்போது மிகப்பெரும் அரசனாக இருக்கும் அல்லாஹ், தனது ஒரு பண்பு **ஹலீம்** (இரக்கமுடையவன்) என்று கூறியிருக்கும்போது அவன் இவர்களை உடனடியாகப் பிடிக்க வேண்டும் என்று நாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? அவ்வாறு அவன் பிடிக்கவில்லை என்றால் இந்த மார்க்கம் இறைவனிடமிருந்து வந்த மார்க்கமல்ல என்று நாம் ஏன் கருத வேண்டும்? அல்லது இறைவனே இல்லை என்று ஏன் நினைக்க வேண்டும்? உலக விஷயங்களில் ஒருவர் செய்த குற்றத்திற்காக அவருக்கு தண்டனை கிடைத்த பிறகு அந்த விஷயம் அவரது எல்லைக்குட்பட்டதாக மட்டும்தான் இருக்கும். அல்லது அதிகபட்சம் என்ன நடக்குமென்றால் அந்த நபரால் வளர்க்கப்பட்ட மக்கள் அல்லது அவரது மனைவி, மக்கள், பெற்றோர், சகோதர சகோதரிகள் அவர் தண்டனைக்கு ஆளாவதைக் கண்டு துன்பத்திற்காளாவார்கள். ஒருவர் செய்த குற்றத்திற்காக அவரை தூக்கில் தொங்க விட்டாலும் அவரது சந்ததிகள் தொடர்ந்து இருந்து வருவார்கள். அதாவது குறைந்தபட்சம் மனித இனத்தில் தலைமுறை தலைமுறையாக சந்ததிகள் இருந்து வருவார்கள். அந்த குடும்பத்தின் சந்ததிகள் தொடர்ந்து இருந்து வருவார்கள். அந்த சமுதாயத்தில் அடுத்த தலைமுறை தொடர்ந்து இருந்து வரும். ஆனால், நான் மனிதயினம் செய்கின்ற குற்றங்களுக்காக அவர்களைப் பிடிக்க ஆரம்பித்தால், அதுவும் மிக விரைவில் பிடிக்க ஆரம்பித்தால் பிறகு மனிதயினமே அழிந்து விடும் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே, அல்லாஹ் கால அவகாசம் வழங்கக் கூடியவனாக இருக்கின்றான் என்ற அவனது சட்டம் இல்லாமல் மனிதயினம் நிலைத்திருக்க முடியாது.

ஏனென்றால், உலகம் பாவத்தால் நிரம்பியிருக்கின்றது. ஒவ்வொரு பாவத்திற்காகவும் இந்த உலகிலேயே அல்லாஹ் தனது தண்டனையை இறக்க ஆரம்பித்தால் அல்லது உலகம் தோன்றிய நாள் முதல் தண்டனையை அவன் தொடர்ந்து இறக்கிக் கொண்டேயிருந்தால் மனிதயினமே அழிந்து போயிருக்கும். நல்லவர்களும் உலகில் இருக்கின்றார்கள் என்பது சரிதான். ஆனால், நாம் பார்க்கும்போது 100 சதவிகிதம் ஒவ்வொரு நன்மையையும் முழுமையாக செய்யக்கூடியவர்கள் மிகவும் குறைவாகத்தான் இருக்கின்றார்கள். அதாவது பாவமே செய்யாதவர்கள் மிகவும் குறைவாகத்தான் இருக்கின்றார்கள். அல்லாஹ் ஒருவர் செய்த எந்த குற்றத்திற்காகவும் தண்டனை அளிக்கும் வகையில் அவரைப் பிடிக்கலாம். இரண்டாவதாக, இவ்வாறு நன்மையை மட்டுமே செய்தவர்களின் மூதாதையர்களும் நல்லவர்களாகத்தான் இருந்தார்கள் என்பதற்கு என்ன ஆதாரம்

இருக்கின்றது? அந்த மூதாதையர்கள் செய்த பாவத்திற்காக அவர்கள் அந்த சமயத்திலேயே பிடிக்கப்பட்டு இருந்தால் அவர்களது அடுத்த தலைமுறை இந்த உலகில் பிறந்திருக்கமாட்டார்கள். பிறகு இந்த நல்லவர்களின் தலைமுறை தொடர்ந்து உலகில் நீடித்திருக்க முடியாது. பிறகு படிப்படியாக இறுதியில் மனித இனமே அழிந்து போயிருக்கும்.

எனவே, ஒவ்வொரு பாவத்திற்கும் உடனடியாக இறைவனின் தண்டனை கிடைத்தால் அல்லது இறைவனின் பிடி உடனடியாக ஒருவரை அழிக்க ஆரம்பித்தால் பிறகு மனித இனமே முற்றிலும் அழிந்து போய் விடும். பலருக்கும் அல்லாஹ் இந்த உலகிலும் தண்டனை வழங்குகின்றான் என்பது சரிதான். ஆனால், நான் மனிதர்களை வழிகெடுப்பதற்காக அவர்களின் முன்னாலும் பின்னாலும் அவர்களின் வலது புறமும் இடது புறமும் வருவேன் என்று ஷய்த்தான் கூறிய சமயத்தில் நான் நரகத்தை உன்னைப் பின்பற்றுகின்ற இவர்கள் எல்லாராலும் நிரப்பி விடுவேன் என்று அல்லாஹ் கூறினான். சிலருக்கு அவர்களது செயல்கள் இந்த உலகத்திலேயே அவர்களுக்கு நரகத்தின் முன்மாதிரியைக் காட்டி விடுகின்றது. ஆனால், இந்த நரகத்தின் காலகட்டம் இவர்கள் இறந்த பிறகு இவர்களுக்கு கிடைக்கும் தண்டனையிலிருந்து ஆரம்பமாகும். அல்லாஹ் நற்கூலி அல்லது தண்டனை கிடைப்பதற்குரிய ஒரு நாளை நிர்ணயித்திருப்பதுகூட அல்லாஹ் உடனடியாக ஒருவரை இந்த உலகிலேயே பிடிப்பதில்லை. மாறாக, அவர்களைக் கொஞ்சம் போகவிட்டுத்தான் பிடிக்கின்றான் என்பதற்குரிய ஆதாரமாக இருக்கின்றது. மறு உலகம் சென்ற பிறகு நற்கூலியா? தண்டனையா? என்பதற்கான தீர்ப்பு வழங்கப்படும். எனவே, மறுமையின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் இந்த உலகில் எந்த பிடியும் நமக்கு வராமல் இருப்பதால் மறுவுலகிலும் நம்மிடம் எதுவும் கேட்கப்படமாட்டாது என்று கருத வேண்டாம். ஏனென்றால், நமது பாவங்களுக்காக ஒருவர் பலியாகியுள்ளார் அல்லது நமக்கு தண்டனை வழங்கக்கூடிய இறைவனே இல்லை என்றும் இவர்கள் நினைக்க வேண்டாம்.

அந்தோ! அல்லாஹ் இவர்களை சுதந்திரமாக விட்டு வைப்பதிலிருந்தும் தவறான கருத்துக்கு ஆளாகுவதற்குப் பகரமாக அல்லாஹ்வே இல்லை என்று மறுக்கக் கூடியவர்கள் அல்லாஹ்வின் உண்மை நிலையை அறிந்து அவன் பக்கம் குனிபவர்களாக ஆக வேண்டும்.

பிறகு இறைவன் இந்த வசனத்தில் இன்னொரு கருத்தையும் கூறியுள்ளான். ஒவ்வொரு பாவத்திற்காகவும் ஒருவரை உடனடியாக பிடிப்பதாயிருந்தால் இந்த பூமியில் எந்த ஓர் உயிரினத்தையும் நான் எஞ்சியிருக்கும்படி விட்டு வைத்திருக்க மாட்டேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். இது ஏன் என்றால் ரஹ்மானான இறைவன் மனிதர்கள் இந்த உலகில் எஞ்சியிருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த உலகில் உயிரினங்களைப் படைத்துள்ளான். மனிதன் பாவங்களைச் செய்கின்றான். அதற்காக உயிரினங்களை விட்டு வைத்திருக்கமாட்டேன் என்று இறைவன் கூறுவதன் நோக்கமென்ன? இது ஏன் என்றால், இறைவனின் மற்ற படைப்பினங்கள் உயிர் வாழ்வது மனிதன் உயிர்வாழ அவசியமானதாக இருக்கின்றது. மாறாக, மனிதன் படைக்கப்படுவதற்கு முன்பே மற்ற படைப்பினங்களை அல்லாஹ் படைத்து விட்டான். மற்ற படைப்பினங்களின் வாழ்வுதான் முதலில் ஆரம்பமானது. பிறகு ஒவ்வொரு பொருளையும் அல்லாஹ் மனிதர்களுக்கு தொண்டாற்றுவதற்காக வைத்துள்ளான். அவற்றை மனிதனுக்கு ஊழியம் செய்யவே அவன் கட்டளையிட்டுள்ளான். இறைவன் தண்டனை வழங்குவதன் மூலம் மனிதனின் வாழ்வை அழிப்பதாக இருந்தால் அவன் மற்ற படைப்பினங்களை முற்றிலுமாக அழித்திருப்பான். ஏனென்றால், அவைதான் மனிதனின் வாழ்க்கை எஞ்சி நிற்பதற்கு காரணமாக இருந்தன. அவற்றை அழித்து விட்டால் மனிதன் ஒருவித தண்டனைக்கு ஆளாகி அழிந்திருப்பான். இதனை இப்படியும் கூறலாம். மனிதர்கள் மீது இறை தண்டனை இறங்கும்போது மனிதர்கள் உலகில் எஞ்சியிருப்பதற்கு எவை காரணமாக இருக்கின்றனவோ அவற்றையும் அல்லாஹ் அழித்து விடுகின்றான். ஏனென்றால், மனிதனே இல்லாதபோது இந்த பொருள்களின் தேவையும் இல்லாமலாகி விட்டது. எனவே, ஒரு குற்றத்தின் காரணமாக அல்லாஹ் ஒருவரை உடனடியாக தண்டிக்காமல் இருப்பதில் மிகப்பெரும் நுட்பமான

ஞானம் இருக்கின்றது. எவ்வாறு நல்லவர்களிடையே தீயவர்கள் பிறந்து விடுகின்றார்களோ அவ்வாறே தீயவர்களிலிருந்து நல்லவர்களும் பிறக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் இந்த ஹலீம் என்ற பண்பை நன்றாகப் புரிந்திருந்தார்கள். அதனால் தான் தாயிப் நகரத்தில் அவர்கள் பிரச்சாரத்திற்காக சென்ற போது இறைவன் கூறியதற்கு ஏற்ப அந்த தீயவர்கள் வாழ்ந்த சமுதாயத்தை அழிக்க அவன் நாடிய போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே! இவர்களது சந்ததிகளிலிருந்து உன்னை வணங்குபவர்கள் பிறப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். நான் இதற்காக உன்னிடமே துஆ செய்கின்றேன். நீ எனது துஆவை ஏற்றுக் கொள்வாயாக! என்று இறைவனிடம் வேண்டினார்கள். பிறகு இந்த சமுதாயத்திலிருந்து ஏக இறைவனை வணங்கக்கூடியவர்கள் பிறந்ததை உலகம் கண்டு கொண்டது. எவர்களது வாழ்க்கையின் நோக்கமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்ய வேண்டும் என்பதற்காக இருந்ததோ அவர்கள் தங்களது உயிரை அவர்களுக்காக அர்ப்பணம் செய்பவர்களாக மாறி விட்டார்கள். எனவே, அல்லாஹ் கால அவகாசம் வழங்குவதில் மிக நுட்பமான ஞானம் இருக்கின்றது. இப்படிப்பட்டவர்களிடம் நான் கணக்குக் கேட்க மாட்டேன் என்று அல்லாஹ் ஒருபோதும் கூறவில்லை. மாறாக, அவர்களைத் தண்டிப்பதற்கு முன் அவன் அவர்களுக்கு கால அவகாசம் வழங்குகின்றான். அவர்களைத் தண்டிப்பதற்கான அந்த நேரம் வரும்போது அதை எவரும் தடுத்து நிறுத்த முடியாது என்று அல்லாஹ் கூறுகின்றான். பிறகு இன்னோரிடத்தில் அல்லாஹ் திருக்குர்ஆனில் இப்படிப்பட்ட மக்களைப் பற்றி குறிப்பிடுகையில் இவ்வாறு கூறுகின்றான்:

மக்கள் செய்கின்ற செயல்களின் காரணமாக அவர்களுக்கு அல்லாஹ் தண்டனை அளித்துவிடுவானாயின் பூமியின் மேற்பரப்பில் எந்த உயிரினத்தையும் அவன் விட்டு வைத்திருக்கமாட்டான். ஆனால் அவன் அவர்களுக்கென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள இறுதி காலக்கெடு வரை அவர்களை விட்டுவிடுகின்றான். பிறகு அவர்களுக்குரிய குறிப்பிட்ட நேரம் வரும்போது அல்லாஹ் தன் அடியார்களை கவனிப்பவனாக இருக்கின்றான் (என்பது தெளிவாக தெரியவரும்). (35:46)

இந்த வசனத்திற்கு முன்புள்ள ஒரு வசனத்தில் அல்லாஹ் தனது பண்பாகிய *ஹலீம்* (இரக்கமுடையவன்) என்பதை குறிப்பிட்டு இவ்வாறு கூறுகின்றான்.

நிச்சயமாக அல்லாஹ்வே வானங்களும் பூமியும் (தம் இடங்களிலிருந்து) விலகி விடாதவாறு தடுக்கின்றான். அவை விலகிவிடுமாயின், அவனுக்குப் பின்னர் அவற்றை (அழிவிலிருந்து) எவராலும் தடுக்க இயலாது. நிச்சயமாக அவன் மிக்க இரக்கமுடையவனும் மிக்க மன்னிப்பவனுமாவான். (35:42)

நம்பிக்கை கொள்ளாமல் நிராகரிப்பவர்கள் தங்களது தீய செயல்களின் காரணமாக அல்லாஹ்வின் பிடியின் கீழ் வருவதற்கு தகுதியுடையவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் இறைவன், கருணை காட்டக்கூடியவனாகவும், இரக்கமுடையவனாகவும், மன்னிக்ககூடியவனாகவும் இருக்கின்றான். அவனே இவர்களைக் காப்பாற்றி விடுகின்றான். பிறகு இவர்களுக்கு கால அவகாசம் வழங்கி இன்னும் உங்களுக்கு நேரம் இருக்கின்றது. உங்களது நிலைமைகளை மாற்றிக் கொள்ளுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக நீங்கள் மேற்கொண்டு வரும் பரிமாற்றத்தை மாற்றுங்கள். உங்களை சீர்திருத்திக் கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் நடந்து கொள்ளாத நிலையில் அல்லாஹ் உங்களை கணக்கெடுக்க ஆரம்பித்தால் பிறகு உங்களது செயல்களின் காரணமாக உடனடியாக உங்களுக்கு தண்டனை வழங்க ஆரம்பித்தால் பிறகு சில நொடிகளில் அவனால் உங்களை அழித்துவிட முடியும். மேலும் வானம், பூமி ஆகியவற்றை அல்லாஹ் தடுத்து வைத்துள்ளான். அவை அவற்றிற்குரிய இடங்களிலிருந்து விலகி விட்டால் பிறகு அது கியாமத்தின் முன்மாதிரியாக இருக்கும். எனவே, எந்த இறைவன் விண்ணையும் மண்ணையும் படைத்துள்ளானோ அவன் உடனடியாக எவரையும் பழிவாங்கமாட்டான். மேலும் அவன்

மன்னிக்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். அவன் பக்கம் குனியுங்கள். மேலும் உங்களது எல்லைக்குள் நீங்கள் நின்று கொள்ளுங்கள் என்றே அல்லாஹ் எச்சரிக்கை செய்துள்ளான். பிறகு நான் தற்போது கூறிய 35:46 வது வசனத்திலும் அல்லாஹ் மீண்டும் இதே விஷயத்தைக் கூறியுள்ளான். அல்லாஹ் உங்களது இந்த செயல்களின் காரணமாக உங்களை உடனடியாக பிடிப்பதாக இருந்தால் காட்டிலுள்ள விலங்குகளும் எஞ்சியிருக்க முடியாது. வீட்டில் வாழும் பிராணிகளும் எஞ்சியிருக்க முடியாது. பறவைகள் கூட எஞ்சியிருக்க முடியாது. உங்களது வாழ்க்கை எஞ்சியிருப்பது எவற்றின் வாழ்க்கையுடன் தொடர்புடையதாக இருக்கின்றதோ அவற்றை மட்டும் அழித்து விட்டாலே உங்களது வாழ்வு மிகவும் வேதனைக்குரிய வாழ்வாக ஆகி விடும். பிறகு இந்த தண்டனையில் மூழ்கியவாறு நீங்கள் அழிந்து விடுவீர்கள். எனவே எந்த விஷயத்தில் நீங்கள் பெருமையடிக்கின்றீர்கள்? எந்த விஷயத்தில் நீங்கள் கர்வம் கொள்கின்றீர்கள்? என அல்லாஹ் இந்த வசனங்களில் மீண்டும் அதே கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளான்.

தற்காலிகமாக அவன் வழங்கியிருக்கும் கால அவகாசத்திலிருந்தும் நீங்கள் படிப்பினையைப் பெற வேண்டும். இது நிரந்தரமான தண்டனையாகவும் மாறலாம். உதாரணமாக இங்கு கோழிகளை அழிக்கின்ற ஒரு நோய் பரவியது. Bird Flu என்று அதை கூறுவார்கள். உலகின் பல இடங்களில் அது பரவியிருக்கின்றது. இந்த நோய் உலகிலுள்ள பல நாடுகளிலுள்ள மக்களை கவலைக்குள்ளாக்கியது. ஆக இவை இறைவன் புறமிருந்து வருகின்ற சிறு சிறு தாக்குதல்களாகும். ஆனால் புரிந்து கொள்ளக் கூடியவர்களால்தான் இதனைப் புரிந்து கொள்ள முடியும். ஒரு காலத்தில் பசுக்களிடையே பரவிய நோய் இவர்களை கவலைக்குள்ளாக்கியது. எல்லாவற்றின் மீது ஆற்றல் பெற்றுள்ள அல்லாஹ் ஒரே நேரத்தில் இந்த உலகில் வாழ்கின்ற விலங்குகளிடையே ஏதாவது ஒரு நோயை உருவாக்கி விட்டால் பிறகு இதன் மூலமே உலகம் தண்டனைக்கு ஆளாகி விடும் என்பதை சிந்தனை செய்து பாருங்கள்.

எனவே, அல்லாஹ் கூறுகின்றான். ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு எல்லை இருக்கின்றது. அல்லாஹ் விதித்துள்ள இறுதி காலக்கெடு வரை அவன் மனிதனுக்கு கால அவகாசம் வழங்குகின்றான். அந்த குறிப்பிட்ட நேரம் வரும் வரை மனிதன் தனது பரிமாற்றத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லையென்றால், இறைவனின் பணிகளில் கை வைப்பதிலிருந்தும் விலகவில்லையென்றால் பிறகு மேலும் அல்லாஹ் கால அவகாசம் வழங்கமாட்டான். பிறகு ஹலீம் என்ற அவனது பண்பிற்குப் பகரமாக அவனது மற்ற பண்புகள் தனது பணியைச் செய்ய ஆரம்பித்து விடும். இந்த 35:46 வசனத்திலும் மற்ற வசனங்களிலும் தாபத்துன் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு உயிரினங்கள் அல்லது விலங்குகள் என்று பொருள். பூமியிலுள்ள கிருமிகள் என்பதும் இதற்குரிய பொருளாகும். எவர்கள் இறைவனுக்கும் அவனது தூதர்களுக்கும் எதிராக நிற்கின்றார்களோ அவர்கள் உலக பூச்சிகளாவார்கள். இவர்கள் தங்களை சீர்திருத்திக் கொள்ளவில்லையென்றால் எவ்வாறு பூச்சிகளை காலால் மிதித்து அழிப்பது எவ்வித குற்றமும் இல்லையோ அவ்வாறே அல்லாஹ்வும் இவர்களை அழித்து விடுவான். அல்லாஹ் இப்படிப்பட்டவர்களை பொருட்படுத்தவே மாட்டான். ஆனால் அல்லாஹ் தனது சட்டத்திற்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட காலம் வரை இவர்களுக்கு அவகாசம் வழங்கியுள்ளான். அல்லாஹ்வின் பார்வையிலும் மார்க்கப் பற்றுள்ள ஒவ்வொருவரது பார்வையிலும் இந்த மக்கள் உண்மையில் இல்லாதவர்களாக இருக்கின்றார்கள். எனவே, தங்களது செயல்களால் இஸ்லாத்தில் ஒரு இறைவன் இருக்கின்றான் என்றால் அவன் எங்களுக்கு முன்னால் வந்து எங்களை ஏன் பழிவாங்குவதில்லை என்று கேட்பவர்களுக்கு நாம் கூறும் பதில், அல்லாஹ் **ஹலீம்** ஆக இருக்கின்றான். மன்னிக்கக் கூடியவனாகவும் இருக்கின்றான். ஆனால் அவனது ஆட்டு உரல் இயங்கும்போது அது இந்த உலகில் வரம்பு மீறி செயல்படுபவர்களை தோல்வியடையச் செய்து விடும். அவர்கள் இழப்பிற்கு உரியவர்களாக ஆகிவிடுவர்.

திருக்குர்ஆனின் இந்த வசனங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எதிராக பரிகாசம் செய்து அவர்களை தரக் குறைவாகவும் இழிவாகவும் பேசுவதிலிருந்தும் விலகாமல் இருப்பவர்களுக்கும் எச்சரிக்கை இருக்கின்றது. அல்லாஹ்

வழங்கியுள்ள சலுகையிலிருந்து தவறாக நீங்கள் பலன்பெறக்கூடாது. திருக்குர்ஆனை நம்புபவர்கள் மீது இன்னும் மகத்தான பொறுப்புகள் இருக்கின்றன. அவர்கள் சிந்தனை செய்து தவறான முறையில் குற்றம் சுமத்துவதிலிருந்தும் பரிகாசம் செய்வதிலிருந்தும் விலக வேண்டும். அல்லாஹ் உங்களைப் பிடிக்காமல் விட்டு வைத்திருப்பதால் அது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொய்யர் என்பதற்குரிய ஆதாரமுமல்ல. (நவூதுபில்லாஹ்). மேலும் அது நீங்கள் உண்மையாளர் என்பதற்குரிய ஆதாரமுமல்ல. முஸ்லிம்கள் மீதும் பேராபத்துகள் வந்த கொண்டிருக்கின்றன. எனவே, அவர்கள் இது குறித்து சிந்திக்க வேண்டும்.

அஹ்மதிகளிடமும் நான் ஒரு விஷயத்தை தெரிவிக்க விரும்புகின்றேன். அவர்களில் அவசரப்படுகின்ற சிலர் இந்த நிலைமைகள் ஏன் மாறாமல் இருக்கின்றது? என்று அது பற்றி சரியாக புரிந்து கொள்ளாத நிலையில் கவலையடைகின்றார்கள். அல்லாஹ் கூறியிருப்பது போன்று ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒரு குறிப்பிட்ட காலத்தை அவன் நிர்ணயித்திருக்கின்றான். தண்டனை தொடர்பாக குறிப்பாக ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்திருப்பதாக அவன் கூறியுள்ளான். அந்த நேரம் வரும்போது அது ஒரு நொடி முந்தவும் செய்யாது; பிந்தவும் செய்யாது. அல்லாஹ் காலத்தின் தேவைக்கு ஏற்ப தனது பண்புகளை வெளிப்படுத்திக் காட்டுகின்றான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடமும் அல்லாஹ் அவர்களது ஜமாஅத்திற்கு வெற்றியை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கின்றான். நிச்சயமாக அந்த வெற்றி வரும். இன்ஷா அல்லாஹ். சில அஹ்மதிகள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கியுள்ள சில இல்ஹாம்களுக்கு விளக்கமளித்தவாறு வெற்றியின் காலத்தை அவர்களாகவே நிர்ணயித்து விடுகின்றார்கள். ஆனால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களோ அல்லாஹ் என்னிடம் அந்த குறிப்பிட்ட வெற்றியின் நேரத்தை தெரிவிக்கமாட்டேன் என்று கூறியதாக கூறியுள்ளார்கள். எனவே, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் அந்த குறிப்பிட்ட நேரத்தை தெரிவிக்காதபோது அந்த நேரத்தை அறிந்து கொள்வதற்கு நானும் நீங்களும் யார்? அந்த குறிப்பிட்ட நேரம் பற்றி தெரிந்திருந்தால் பக்ததன் (அது திடீரென்று வரும்) என்று இறைவன் கூறியிருப்பதன் பொருள் என்ன? எனவே, நமது பணி துஆ செய்து கொண்டிருப்பதுதான். மேலும் அந்த வெற்றியின் நேரத்திற்காக காத்திருக்க வேண்டும்.

சமுதாயத்தின் வாழ்க்கையில் சில ஆண்டுகள் ஒரு நீண்ட காலகட்டமாக இருப்பதில்லை. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்திற்கு கிடைத்து வரும் முன்னேற்றம் இதற்குரிய தெளிவான ஆதாரமாக இருக்கின்றது. கடுமையான எதிர்ப்புகளுக்கிடையில் இறைவன் நம்முடன் இருக்கின்றான். வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பகைமையில் எத்தகு முயற்சிகள் ஜமாஅத்திற்கு எதிராக செய்யப்பட்டாலும் அது ஜமாஅத்திற்கு எவ்வித சீர்குலைவையும் ஏற்படுத்த முடியாது. ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் முன்னேறிச் செல்கின்றது. இனியும் முன்னேறிக் கொண்டே செல்லும். இன்ஷா அல்லாஹ். நமது செயல்களின் பக்கம் கவனம் செலுத்துவதுதான் நமது பணியாக இருக்கின்றது. மேலும் இது முக்கியமான ஒரு விஷயமாகும். அல்லாஹ் நமது உள்ளங்களை தூய்மையாக வைத்திருப்பானாக! அவனது திருப்தியைப் பெறும் வகையிலுள்ள நற்செயல்களை நாம் செய்வதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! நாம் நமது செயல்களையும் நமது உள்ளங்களையும் தவறான பணிகளைச் செய்வதிலிருந்தும் தூய்மையாக வைத்திருந்தால் அந்த வெற்றி விரைவாக வரலாம். அல்லாஹ் வாக்களித்துள்ள அந்த வெற்றியின் காட்சிகள் நமக்கும் தென்படலாம். எனவே, நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனாகவும் இரக்கமுடையவனாகவும் இருந்தும்கூட நமது ஏதாவதொரு செயலின் காரணமாக நாம் அவனது பிடியின் கீழ் வந்து விடாமல் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான்:

*யுஆஹிஸ்கும் பிமா கஸபத் குலூபுகும்* - உங்களது உள்ளங்கள் சம்பாதித்துள்ளது தொடர்பாகவே அவன் உங்களைப் பிடிப்பான். தொடர்ந்து அல்லாஹ் கூறுகின்றான்:

*வல்லாஹு கபூருன் ஹலீம்* - அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் இரக்கம் உடையவனுமாவான்.

**இதுபற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

மனிதனின் உள்ளங்களில் அவன் அறியாமலேயே எழுகின்ற எண்ணங்கள் அவனை பாவியாக்குவதில்லை. மாறாக, அல்லாஹ்வின் பார்வையில் இவை மூன்று வகையில் உள்ளன. முதலாவதாக மார்க்கத்திற்கும், நேர்மைக்கும், நீதிக்கும் புறம்பான சொற்கள் நாவில் வருவது. இரண்டாவதாக, வெளிப்படையாக காணப்படும் உறுப்புகளிலிருந்தும் இறைவனுக்கு கீழ்படியாத வகையிலுள்ள செயல்கள் நடப்பது. **மூன்றாவதாக**, உள்ளம் இறைவனது கட்டளைகளுக்கு கட்டுப்படாமல் இருக்க உறுதி கொள்வது. அதாவது இந்த தீய செயலைக் கண்டிப்பாக செய்வேன் என்று உறுதியான எண்ணத்துடன் செயல்படுவது. இது தொடர்பாகவே அல்லாஹ் *வலா கின் யுஆஹிஸ்கும் பிமா கஸபத் குலூபுகும்* - எந்தப் பாவங்களை அதை செயல்படுத்துவதற்காக உறுதியான எண்ணத்துடன் உள்ளங்கள் ஏற்றுக் கொள்கின்றனவோ அந்தப் பாவங்களுக்காக தண்டனை கிடைக்கும். ஒரு தீய செயலை செய்வதை உள்ளம் உணர்வதால் மட்டும் தண்டனை வராது. ஏனென்றால், அவ்வாறு தீய எண்ணங்கள் வராமல் இருப்பது மனித இயல்பின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லை. எனவே, அப்படிப்பட்ட எண்ணங்களின் காரணமாக கருணைமிக்க இறைவன் நம்மை பிடிக்க மாட்டான். ஏனென்றால், அது நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாக இருக்கின்றது. ஆனால் நமது தீய எண்ணங்களை நாம் நமது நாவு, கைகள், உள்ளம் ஆகியவற்றைக் கொண்டு செயல்படுத்துகின்றபோது அல்லாஹ் நம்மைப் பிடிக்கின்றான். சில நேரங்களில் அப்படிப்பட்ட தீய எண்ணங்களால்கூட நமக்கு நற்கூலி கிடைக்கின்றது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கால், கைகள் செய்யும் தீமைகள் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. மாறாக கண்கள், காதுகள், உள்ளம் செய்கின்ற பாவங்களைப் பற்றியும் அவன் குறிப்பிட்டுக் கூறியுள்ளான். அவன் தனது தூய வசனங்களில் இதுபற்றி இவ்வாறு கூறுகின்றான்.

*காது, கண், மனம் இவையெல்லாவற்றையும் குறித்து (உம்மிடம்) விசாரிக்கப்படும். (17:37)*

பாருங்கள்! எவ்வாறு இறைவன் கண், காது ஆகியவை செய்யும் பாவங்கள் பற்றி கூறியுள்ளானோ அவ்வாறே உள்ளம் செய்கின்ற பாவத்தைக் குறித்தும் இந்த வசனத்தில் குறிப்பிட்டுக் கூறியுள்ளான். ஆனால் உள்ளங்களில் உள்ள பாவங்கள் என்பது உள்ளங்களில் வரும் எண்ணங்கள் மட்டுமாகாது. ஏனென்றால், இவை உள்ளங்களின் கட்டுப்பாட்டில் இல்லை. மாறாக, உள்ளத்தின் பாவம் என்பது அதை உறுதியாக செய்ய முடிவு எடுத்துக் கொள்வதேயாகும். மனிதனின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாமல் அவனது உள்ளங்களில் வரும் எண்ணங்கள் பாவங்களாகாது. ஆனால் அவற்றை செய்வதாக மனிதன் உறுதியான முடிவு எடுத்து விட்டால் அவை பாவங்களாகிவிடும். பிறகு மனிதன் அதை செய்யவும் செய்கின்றான். அவ்வாறு மனிதனின் அந்தரங்கத்திலுள்ள பாவங்கள் தொடர்பாக இன்னொரு இடத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

*குல் இன்னமா ஹர்ரம ரப்பியல் வ:.வாஹிஸ ம ஸஹர மின்ஹா வமா பதன* - அதாவது இறைவன் வெளிப்படையாக, அந்தரங்கமாக ஆகிய இருவிதத்தில் செய்யப்படும் பாவங்களையும் ஹராமாக்கியுள்ளான்.

எனவே, நேர்மை மற்றும் நீதியின் கழுத்தை நெறிக்கும் வகையிலுள்ள எந்த ஒரு சொல்லும் ஒரு அஹ்மதியின் நாவிலிருந்து வரக்கூடாது. எந்த உண்மையில் நிலைத்திருக்கும்படி அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளானோ அவற்றிலிருந்தும் நாம் விலகித் தொலைவில் சென்றுவிடக் கூடாது. நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும்படி இறைவன் நமக்கிட்ட கட்டளையை ஒருபோதும் நாம் மறந்துவிடக் கூடாது. உங்களுக்கு மிக நெருக்கமானவர்களுக்கு எதிராக நீங்கள் சாட்சி கூற வேண்டியது வந்தாலும் நீங்கள் நிச்சயமாக சாட்சி கூற வேண்டும் என்றே இறைவன் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவது தொடர்பாக நமக்கு கட்டளையிட்டுள்ளான். எவர் மீதுள்ள பகைமையும் நீங்கள் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதிலிருந்தும் உங்களைத் தடை செய்துவிட வேண்டாம் என்றும் இறைவன் கூறியுள்ளான்.

அல்லாஹ் ஹலீமாக இருக்கின்றான். எனவே, நாமும் மென்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். பிறகு நமது எந்தவொரு செயலிலும் இறைவனுக்குக் கட்டுப்படாமல் இருக்கின்ற தன்மை இருக்கக் கூடாது. வெளிப்படையாக மட்டுமின்றி எவராவது தங்கள் உள்ளத்தில் ஏதாவது தவறான வேலையைச் செய்ய எண்ணியிருந்தால் இந்த விஷயமும் அவரை இறைவனின் பிடியின்கீழ் கொண்டு வந்து விடும். ஹதீஸில் இவ்வாறு இருக்கிறது. ஒரு நபரின் உள்ளத்தில் தவறான எண்ணம் வந்து அவர் அதனை அமுக்கிவிட்டால், பிறகு அந்த எண்ணத்திற்கேற்ப செயல்படாமல் இருந்தால் அல்லாஹ் அந்த நபருக்கு ஒரு நன்மையைச் செய்த நற்கூலியை முழுமையாக வழங்குவதாக எழுதி விடுவான். இந்த தீய எண்ணத்தை அமுக்கி விட்ட காரணத்தால் அவருக்கு அந்த நன்மையை செய்வதற்கான கூலி கிடைக்கும்.

எனவே, ஹலீமாக இருக்கக்கூடிய இறைவனின் இந்த பண்பை கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். அவன் மனிதனின் செயல்களுக்காக அவனை உடனடியாக பிடிக்கமாட்டான். மாறாக, அந்த மனிதன் தன்னிடத்தில் ஒரு தூய மாறுதலை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை அவன் அவனுக்கு வழங்குகின்றான். அல்லாஹ் தனது ஹலீம் என்ற பண்புடன் தனது கபூர் என்ற பண்பையும் இணைத்துக் கூறியிருப்பதன் மூலம் எனது அடியார்கள் தவறிழைக்கின்ற போது நான் அவர்களைக் கண்டும் காணாமல் விட்டுவிடும்போது அல்லது அவனது குறைகளைத் திரையிட்டு மறைக்கும்போது அடியானும் இந்த பாவங்களில் முன்னேறுவதற்குப் பகரமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். என்னிடம் பாவமன்னிப்புக் கேட்க வேண்டும். எனது இந்த பண்பிலிருந்து பலன்பெற வேண்டும் என அல்லாஹ் அறிவித்துள்ளான். அல்லாஹ் அவனது இந்த பண்பிலிருந்து பலன் பெறுவதற்கான நற்பாக்கியத்தை நம் அனைவருக்கும் வழங்குவானாக!

**JUMUA KUTHBA**

***HADHRAT KHALIFATUL MASIH V***

**AT BAITUL FUTUH, LONDON**

**ON 14.03.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**